TIT-BITS OF ANIMAL LIFE

A QUARTERLY ADVOCATE OF HUMANITY FOR SCHOOLS AND FAMILIES

ஜந்து வர்த்தமான ஸாரம்.

பாடசாலைகளுக்கும் வீடுகளுக்கும் உபயோகப்படும்

ஜீவகாருண்ய விளக்க மும்மாதப் பத்திரிகை.

சம்புடம் XI.] NOVEMBER, 1911-ஆம் நவம்பர்மீ. [இலக்கம் 4.

இந்தியா தேசத்துக் காட்டுக்கோழி.

சாதாரணமாய்ப் பெட்டைக்கோழிகள் முட்டையிட்டவுடனே உரத்திக் கொக்கரிப்பதற்குக் காரணம் பலர் பலவாறு கூறுகிறார்கள். அது தான் செய்த காரியத்தின் பராக்கிரமத்தை விளம்புகிற தென்கிறார்கள் சிலர். தன்னுடைய குட்டிகளைப் பார்த்தவுடன் தாய்க்குண்டாகிற ஒரு குதூகலமாயிருக்கலாமென்று சிலர் சொல்லுகிறார்கள். அப்படி யிராதென்று தோன்றுகிறது. ஏனென்றால், பெட்டைக்கோழி குஞ்சு பொரிக்கிற வரையில் தாய் ஆகிறதில்லை. மேலும், அதற்கு முன், கோழிக்குத் தன் முட்டையென்றும் பிற பட்சிகளின் முட்டையென்றும் வித்தியாசம்தெரியாதாம். அந்தக்கொக்கரிப்பு விசேஷமாய் வீரங்கூறுகிற பாவனையாய்த்தா னிருக்கிறது. அதற் குத்தரமாகக் கத்துகிற மற்றக் கோழிகளின் சப்தமும் உபசாரஞ் சொல்வதுபோ லிருக்கிறது. இதுவே அபிப்பிராயமெனக்கு வெகுநாள்வரையி லிருந்தது. ஒரு தடவை இந்தியாவி லுத்தியோகஞ் செய்து வந்தவரும் அந்தத் தேசத்துக் காடுகளில் அதிகமாய் வேட்டையாடிக்கொண் டிருந்தவருமான ஒருவரைச் சந்தித்தேன். பெட்டைக்கோழிகள் கொக்கரிக்கிற வழக்கம் காட்டுக்கோழிக ளிடத்திலிருக்கிற அதே அப்பியாசத்தின் போலியென்று சொன்னார். காட்டி லாகாரந்தேடப்போகிற கோழிக்கூட்டம் முட்டை யிடுவதற்காகத் தனியே நின்றுவிட்ட கோழி, முட்டையிட்டவுடன் கொக்கரிக்க, அதற்குப் பதிலாகக் கூச்சலிடாமற் போனால் அதை யவைகள் மறுபடி கண்டுபிடிக்க முடியாதாம். இதைக் கேட்டவுடன் காட்டுக்கோழிகளிடத்தி லெனக்கு ஒருவிதமான விருப்பந் தோன்றிற்று. அதற்குப் பிறகு வெகுகாலங் கழித்து நானும் இந்தியாவிற்குச் சென்றபோது அத்தேசத்துக் காடுகளொன்றில் வேட்டைக்குச் சென்றேன். அக்காட்டில் ஒரு கோழி பறப்பதை முதல்முதல் கண்டபோது எனக்குண்டான வியப்பும் உள்ளக் கிளர்ச்சியும் சொல்லி முடியாது.

நாட்டுக்கோழி வயல்களில் உல்லாசமாயசைந்தசைந்து நடப்பதைப் பார்க்கும்பொழுது, அதற்குச் சுறுசுறுப்பான குணமும் வேகமாய்ப் பறக்கச் சக்தியுமில்லை யென்று தோன்றுகிறது. ஆனால் காட்டுக்கோழி யப்படியல்ல; அது வெகு ஜாக்கிரதையும் சுறுசுறுப்புமுள்ள பக்ஷி. அது பறக்கும்பொழுது நாட்டினத்தைப்போ லிறகுகளை மந்தமா யசைக்காமல் அதிக விரைவாகப் பறக்கும். அதன் பலவர்ணங்க ளதிக அழகாயிருக்கும். அதனுடைய கறுத்த மார்பும், கழுத்திலுள்ள மஞ்சள் வர்ணமும், சிவந்த முதுகும், காட்டின் பச்சை ஊதா முதலிய நிறங்களுக்கிடையில் நன்றாய்ச் சோபிக்கும். அதற்கு இவ்வாறு பல வர்ணங்க ளமைந்திருப்பதினால் அவை யிருக்கு மிடத்தை வேடர் எளிதில் கண்டுபிடிக்கலாம். ஆகையால் அதன் கண்களும் காதுகளும் அதிகக் கூர்மையாயிராவிட்டால் தப்பித்துக்கொள்வதற்கு முடியாது.

காட்டுக்கோழிக்கு நேரான குழலமைந்த துப்பாக்கிக்கும் முறுக்குக்குழல் துப்பாக்கிக்கும் வேற்றுமை தெரியும். முறுக்குக்

குழல் துப்பாக்கியைக் கண்டா லதற்குப் பய
மில்லை. அது எனக்கு நிச்சயமாய்த் தெரி
யும். ஒரு சமயம் நானொரு காட்டில் போய்க்
கொண்டிருந்தபோது ஒரு வெளிப்படை
யான விடத்தில் ஒரு கோழிக்கூட்ட மிருக்
கக் கண்டு மெதுவா யவைக ளிருக்குமிடத்
தருகில் போய்ச் சேர்ந்தேன். சாதாரணமாய்
நாம் எவ்வளவு சாமர்த்தியமாய்ப் பதுங்கிச்
சென்றாலும் அவை யெப்படியோ அறிந்து
கொண்டு ஜாக்கிரதையுடன் ஓடிப்போய்வி
டும். ஆனால் அந்தச் சமயம் அவை என்னைச்
சிறிதும் இலட்சியஞ் செய்யாமல் ஒரு பய
மும் அவசரமுமில்லாமல் சாவகாசமாய்ப்
பறந்து சென்றன. அப்பொழுது என்னி
டத்திலிருந்தது முறுக்குக்குழல் துப்பாக்கி.

காட்டுக்கோழிகளுக்காகவும் ஆண் மயி
லுக்காகவும் அடிக்கடி காலையிலும் மாலையி
லும் நான் காடுகளில் திரிவதுண்டு. அநேகந்
தடவைகளில் வெறுங்கையாய்த்தான் போக
நேரிடும். சிறிது தூரத்தில் ஒரு கோழியின்
குரலைக் கேட்டு அந்தப் பக்கமாய்ச் செல்ல
இன்னொரு பக்கத்தில் சில செடிகளுக்குப்
பின்புறமாய் ஒரு கூட்டம் செல்லுகிற சப்
தம் கேட்கும். அதைக் கேட்டு அங்கோரடி
யெடுத்து வைத்தவுடன் அவையெல்லாம்
மாயமாய்விடும். மஞ்சளுஞ் சிவப்புமான
நிறங்கள் கண்ணுக்குத் தெரியுமேயொழிய
குறிபார்த்துச் சுடுவதற் கொன்று மகப்ப
டாது. ஒவ்வொருவேளையி லதிர்ஷ்டவச
மாய் ஏதாவது அகப்படும். ஒருநாள் நான்
விடியற்காலத்தி லெழுந்து போயிருந்தேன்.
அப்பொழுது புல்லடர்ந்த வோ ரிடத்தில்
சில கோழிகள் கும்பலாயிருந்தன. மெது
வாய் அந்த விடத்திற்குச் சென்றேன். நான்
வருகிறதை யவை யெப்படியோ தெரிந்து
கொண்டு ஓடத் தலைப்பட்டன. அவைகளி
லொன்றுமாத்திரம் ஓடாம லருகி லிருந்த
வொரு மரத்தி லேறிக்கொண்டது. நான் அம்
மரத்தருகிற் சென்று சுடலாமென்று துப்பாக்
கியைத் தூக்கினேன். ஆனால் அதை அது
உட்கார்ந்திருந்த கிளை மறைத்துக்கொண்
டிருந்தது. சிறிதுநேரங் கழித்து அது கழுத்
தை யொருபுறமாய்ச் சாய்த்தது. உடனே
நான் சுட்டேன். அதன்மேல் குண்டு பட்ட
வுடன் அது மேலே பறந்ததைக்காட்டிலு மதி
கவேகமாய்க் கீழே பறந்துவந்து விழுந்தது.
ஒருதடவை சுட்டவுடன் மற்றப் பறவைக
ளெல்லா மோடிப்போயிருக்குமென்று நினைத்
தேன். அருகிலேயே அவை நடக்கிற சப்த
மெனக்குத் தெரிந்தது. அந்தப் பக்கமாய்ச்
சென்று மறுபடியும் சுட்டேன். உடனே தரை
யில் மஞ்சளும் சிவப்புமான பந்துகளை
யுருட்டி விட்டதுபோல் பல பறவைகள்
உருண்டோடின. அவைகளி லொன்றை நா
னெட்டிப் பிடித்தேன். என்னுடைய ஷிகாரி
இன்னொன்றைப் பிடித்துக்கொண்டான்.

காட்டுக்கோழிகள் ஒன்றையொன்று சண்
டைக்கழைக்கும்பொழுதும் சண்டை செய்
யச் சம்மதிக்கும்பொழுதும் அவ்வளவு ஜாக்
கிரதையா யிருப்பதில்லை. சண்டைக்குச் சம்
மதிக்கிற பாவனையா யவை கொக்கரிப்பது
போல் கூவுகிறதற்குத் தெரிந்த வேடர்கள்
அதேமாதிரி கத்திக்கொண்டே சண்டைக்
கழைக்கிற கோழியினருகிற் சென்று அதைப்
பிடித்துக்கொள்ளுகிறார்கள்.

ஐரோப்பியர்.

ஆமைகளைப் பழக்கும் விதம்.

அநேக ஜனங்கள் ஆமைகளை விலைக்கு
வாங்கி, அவைகளுக்கு உணவு, தண்ணீர்
முதலியவை யொன்றுந்தேவையில்லையென்று
நினைத்தோ அவைகள் தீங்கற்ற பிராணிக
ளானதினா லவைகளுக்குச் சிறுவர்கள் யா
தொரு கெடுதியும் செய்யமாட்டார்களென்ற
எண்ணத்தினாலோ, அவைகளைத் தம்முடைய
தோட்டத்தில் சுயேச்சையாய்த் திரியும்படி
விட்டு வைக்கிறார்கள். பிற கென்றைக்கா
யினு மதைப் பார்க்கப்போனால் அது அகப்
படுகிறதில்லை. சிறிதுநேர மதைத் தேடி
விட்டு அது எங்காவது வளைக்குள் புகுந்து
கொண் டிருக்குமென்றும் மறுபடியும் வசந்த
காலத்தில் அது அங்கு வந்து சேருமென்றுந்
தங்களுக்குள் தேற்றிக்கொண்டு அதைப்
பற்றி யுடனே மறந்தும் விடுகிறார்கள்.

நான் வெகுநாளா யொரு ஆமையை வளர்த்
துவருவதினால் அதைப்பற்றிச் சில விஷயங்
களை யெடுத்துரைக்க விரும்புகிறேன். என்
னுடைய ஆமை சாதாரணமான நில ஆமை
வகுப்பைச் சேர்ந்தது. அதை 1884-ம் வரு
ஷத்தில் வாங்கினேன். அப்படிப்பட்ட
ஜந்துக்களைப் பிரயாணத்தில் நன்றாய்க் கவ
னிக்காததினா லவை மெலிவடைந்திருக்கு
மென்று எனக்கு முன்னமே தெரியுமாகை

யால் உரப்பான ஓடும் பலத்த கால்களும் கூர்மையான கண்களும் பொருந்தியிருந்த ஒரு ஆமையைத் தேர்ந் தெடுத்துக்கொண் டேன். சுற்றிலுஞ் சுவர் கட்டப்பட்டுக் கத வைத்திறந்தாலொழிய மற்றப்படி தப்பித்துக் கொண் டோடமுடியாத வொரு தோட்டத்தி லதை விட்டுவைத்தேன். அதை வாங்கின பொழுது வசந்தகாலமா யிருந்ததினுலும் ஆமைகள் வசந்தகாலத்தில் வளைகளில் மறைந்து ஒளித்துக்கொள்ளுகிற வழக்க முடையவையல்ல வாகையினுலும் அது ஓடிப்போகாமல் தோட்டத்திலேயே நிலத் தின்மேல் விழுந்து கிடக்கும். உணவு விஷ யத்தில் அதற்குத் தோட்டத்தி லகப்படுகிற பண்டங்களே போதுமானவையென் றெண் ணக்கூடாது. லெட்டூஸ் (Lettuees) என்னு மொருவகைக் கீரையையும் வெள்ளரிக்காய் களையும் சிறு துண்டுகளாக நறுக்கித் தினந் தோறுங் கொடுக்கவேண்டும். வெள்ளரிக்கா யின் மேல்தோலை நீக்கவேண்டியதில்லை. ஆகாரத்தைக் கையில் வைத்துக்கொண்டு ஊட்டினுல் ஆமை சுலபமாயுண்ணும். ஆமை கள் தீனி தின்பதி லதிக துரிதமுள்ளனவா யிருந்தபோதிலும் நாம் அவைகளுக் கூட்டும் பொழுது அவைகளை அவசரப்படுத்தக் கூடாது. ஆமை நீரையாயினும் பாலையா யினுங் குடிக்காது. ஆனுல் அவைகளில் ரொட்டித் துண்டுகளைத் தோய்த்துக் கொடுத் தால் வெகு பிரியத்துடன் தின்னும். நல்ல உணவு கிடைக்காத சமயங்களில் ஆமை முள்ளங்கிக் கீரையைத் தின்னும். எல்லா ஆமைகளும் ஒரேமாதிரி யுணவைத் தின்கிற தில்லை. சில ஆமைகளுக் கெப்பொழுதாவ தொருதடவை தண்ணீர் வேண்டியதாயிருக் கும். ஆனுல் அதற் கதிகமாய் நீர்காட்டக் கூடாது. சில ஆமைகளைக் கழுவுதலே கூடாது. சாதாரணமாய் ஆமைக்குப் புத்தி சாதுரியங் கிடையாது. ஆயினு மவைகளைப் பட்சமுடன் ஆதரித்து, வேளைதப்பாமல் தீனி கொடுத்தும் சுயேச்சையாய்த் திரியச் செய்தும், மேலேயெறிவதும் கீழேபோடுவது முதலிய தொந்தரவு செய்யாமலிருந்தால் அவைகளுக்குச் சிறிது சூக்ஷ்மபுத்தி யுண் டாகி, அவைகளின் எஜமானர்களை யறியும் சக்தியு முண்டாகக் கண்டிருக்கிறேன். ஒரு ஆமை தன்னுடைய எஜமானன் கூப்பிட அவனருகேசெல்வதைப்பார்த்திருக்கிறேன். அதற்கு யாராவது தொந்தரவு செய்யும் பொழுதாகிலும், அதற்கு அருவருப்பான ஆகாரத்தை யுண்பிக்கும்போதாகிலும் 'இஸ்' என்று ஒரு சிறிய கூச்சல்தவிர வேறு சப்த மொன்றுஞ் செய்கிறதில்லை. ஆமை வேண்டு மென்று கடிக்காது. அதற்கு ஊட்டும்பொ ழுது ஜாக்கிரதையா யிராவிட்டால், அதன் முக்கோண வடிவமாயிருக்கிற தாடைகளி னுல் ஊட்டுகிறவர்களுக்குச் சிறிது நறுக்கி னுற்போலக் காயமுண்டாகும். ஆமைக்குப் பற்களில்லை யாகையால், அது உணவை மென்று தின்ன முடியாது. ஒரு ஆமைக்கு ஒருவேளைக்கு லெட்டூஸ் இலையில் பாதியும், 10 அல்லது 12 வெள்ளரிக்காய்த் துண்டு களும் போதுமான ஆகாரமாயிருக்கும். நாள்தோறு மாகாரத்தை யதனருகிற் கொண் டுபோய்க் கொடுக்க இயலாவிட்டால், ஒரு ஜன்னலின் வழியாகக் கொஞ்ச மதிகமாகவே போட்டுவைத்தா லது மறுநாள் காலைவரை யில் கெடாமலிருக்கும். அதை யொரே இடத்தில் எப்பொழுதும் வைத்துவந்தால் அதற்கு வேண்டும்போது அவ்விடத்திற்குப் போய்ப் பார்க்கும். என்னிடத்திலிருந்த ஒரு ஆமை உணவின்பொருட்டுத் தோட்டத் திலிருந்து புறக்கடைக் கதவண்டை வரும். உடனே யதை யாரும் கவனிக்காவிட்டால் மறுபடி தோட்டத்துக்குப் போய்விடும். ஆமைக்கு இறைச்சி முதலிய வழக்கமில் லாத உணவுகளைக் கொடுக்கக்கூடாது. அதனு லவைகளுக்குக் கெடுதி யுண்டாகும். ஆமைகள் மே மாசம் முதல் அக்டோபர் மாசம் வரையில் அதிக ஆவலுடன் உண வைத் தின்னும். அவை யுண்பதையும் நடப்பதையும் விட்டு மறைந்திருப்பதற் குப் பிரயத்தனஞ் செய்கிறதாகக் காணப் படும் பொழுது அவைகளை வீட்டுக்குள் கொண்டுபோய் ஒரு பெட்டியில் மிருதுவான படுக்கை போட்டு அதில் விட்டு அப்பெட் டியை உலர்ந்தவிடத்தில் வைக்கவேண்டும். இந்தவிதமாய் வளர்க்கப்பட்டுவந்த என்னு டைய ஆமை முன்னிலும் பலமடைந்திருக் கிறது. ஆமையின் சுபாவமறியாத சிலர், அது சிறு வண்டுகளைத் தின்னுமென்று சொல்லுகிறுர்கள். அது சரியல்ல. அது எப் பொழுதும் மாக்கறியையே தின்கிற ஜந்து.

லீரியான்.

நாய்களின் நன்றியறிவு.

ஒரு பிரபு தம்முடைய புத்திசாலியான நியூபௌண்டுலாண்டு நாயை நாள்தோறும் சமுத்திரக்கரைக் கழைத்துச் செல்வதுண்டு. வழக்கம்போ லொருநாள் அவர் கடற் கரைக்குப் போனவுடன் பெரிய மழை வந்து சமுத்திரம் கொந்தளிப்படைந்தது. அப் பொழுது கரைக்கு வந்துகொண்டிருந்த பட கொன்று கவிழ்ந்துவிடும்போல் காணப்பட் டது. அதைப் பார்த் தந்தப் பிரபு தம்மு டைய நாய்க்கு அந்தப் படகைச் சுட்டிக் காட்டினர். உடனே அந்த நாய் அவரு டைய கருத்தைத் தெரிந்துகொண்டு அப்பட குக்கு நீந்திச் சென்றது. அப்படகிலிருந்த கப்பற்காரன் ஒரு கயிற்றின் நுனியை அதன் வாயில் கொடுத்தான். அந்த நாயதைக் கவ் விக்கொண்டு தன்னுடைய எஜமானனிடத் தில் கொடுத்தது. அவர் அக்கயிற்றை அங் கிருந்த ஒரு தூணில் கட்டினர். அதனல் படகு கவிழாமல் நிலைக்கவே அதிலிருந்த வர்கள் உயிர் தப்பினர்கள்.

ஓர் ஊரில் இடையனெருவன் தன்னு டைய ஆடுகளுக்குக் காவலாயிருக்கும்படி ஒரு நாயை வளர்த்துவந்தான். ஒருநாள் அவன் ஆட்டுமந்தையை மேய ஓட்டிக்கொ ண்டு போயிருந்தபோது ஒரு பாறையினின் றும் மற்றெரு பாறைக்குத் தாண்ட, கால் தவறிப் பாறையின்மேல் விழுந்தான். அதனு லவனுக் கதிக நோயுண்டாகி எழுந்து நடக்க முடியாமற்போயிற்று. அவன் உடனே தன் னுடைய அரைச் சொக்காயைக் கழற்றி, அதை யந்த நாயின் கழுத்தில் கட்டிவிட்டு வீட்டுக்குச் செல்லும்படி சொன்னன். அது வீட்டுக்குச் சென்றபோது வீட்டிலிருந்தவர் கள் அதன் கழுத்தில் தம்முடைய குமாரனு டைய அரைச் சொக்கா யிருக்கக்கண்டு அவ னுக் கேதோ அபாயம் நேரிட்டிருக்கவேண்டு மென் றெண்ணி உடனே அவனைத் தேடுவ தற்குப் புறப்பட்டார்கள். அந்த நாய் அவர் களை வெகு சீக்கிரத்தில் அவ்விடையன் விழுந்திருந்த விடத்திற் கழைத்துக்கொண்டு போயிற்று. பிறகவர்க ளவனை வீட்டுக்குக் கொண்டுபோய்ப் பலவிதமான சிகிச்சோப சாரங்கள் செய்தார்கள்.

ஒரு பிரபு அதிக விவேகமுள்ள ஒரு நாயை வளர்த்துவந்தார். ஒருநாள் அவர் ஸ்நானஞ் செய்யும்பொருட்டு ஓர் ஆற்றுக் குச் சென்று தம் உடுப்புகளை யெல்லாங் கழற்றித் தம்முடைய நாயினிடத்தில் ஒப்பு வித்துவிட்டு, ஆற்றிலிறங்குந் தருணத்தி லந்த நாய் அவருக்குக் குறுக்கே பாய்ந்து அவரை யிறங்கவொட்டாமல் தடுத்தது. அது அவ்வாறு தம்மைத் தடுப்பதின் கார ணம் தெரியாததினு லதை யுபேக்ஷித்துப் பின்னும் ஆழத்திலிறங்கினர். உடனே யந்த நாய் குரைத்துக்கொண்டு தன்னுடைய எஜ மானனுக்கு முன்னுகத் தண்ணீரில் குதித் தது. அப்பொழுது அதை ஒரு முதலை பிடித்துக்கொண்டு போய்விட்டது. அதன்மே லந்தப் பிரபு, தம்முடைய பிராணனைக் காப்பாற்றும்பொருட்டு அந்த நாய் செய்த வுபாயம் பிரயோஜனப்படாமற் போகவே எஜமானனுடைய பிராணத்திற்காகத் தன்னு டைய உயிரையே கொடுக்கத் துணிந்ததை நினைத்து அதிக விசனப்பட்டார்.

மற்றெல்லா ஜந்துக்களையும் பயத்தினல் வாய் திறக்கவொட்டாமல் செய்யும்படி யான அபாயமாகிய நெருப்பினின்று நாய்கள் தங்கள் எஜமானர்களைக் காப்பாற்றின வென் பதைப் பின்வரும் திருஷ்டாந்தங்களால் அறியலாம். அவைகளின் புத்திக்கூர்மையும் வணக்கமும் இங்கு நன்கு காட்டப்பட்டுள் ளன. புதிய இரண்டு திருஷ்டாந்தங்கள் டிசம்பர்மாசத்து சம்ஸ் என்னும் பத்திரிகை யில் குறித்துள்ளன. எஜமானனேடு படுத் துக்கொண்டிருந்த ஸ்காட்லண்ட் தேசத்து நாய், புகைச்சலின் வாசனையை நுகரவே, குரைக்க ஆரம்பித்தது. எஜமானன் எழுந் திருந்தான்; நாயினல் அலைக்கழிக்கப்பட் டெழுந்தும் சங்கதியொன்றும் அறியாதவ னய், அதைச் சும்மா இருவென்று தன்னண் டை கூப்பிட்டான். நாய் குரைத்துக்கொண் டேயிருந்தது; அதன் ஜாக்கிரதைக்காகத் தின்பண்டங்களை எறிந்தான். பின்னும் அந்த நன்றியறிவுள்ள ஜந்து குரைத்துக்கொண்டே யிருக்க, ஏதோ கெடுதி சம்பவித்ததென்று சந்தேகித்துத் தன் படுக்கையினின்று குதித் தெழுந்தான். வீட்டின் அடிப்பாகம் எரிந்து கொண்டிருக்கப் பார்த்தான். உடுப்புகளைக் கழற்றிவிட்டுப் பயந்து ஓடிப்போய் அதிக நஷ்டம் வருவதற்கு முன்னமே நெருப்பை அணைத்தான். அச்சிறு நாய் அதன் எச்ச ரிக்கையில் பிடிவாதமா யிராமற்போனல்

வீடும் வீட்டிலுள்ள ஜனங்களும் சுலபமாய் அழிந்துபோ யிருக்கும்.

கிரேட் டேன் (Great Dane) என்னும் வகையைச்சேர்ந்த ஒரு நாயின் தூக்கமின்மைமற்ருெருதிருஷ்டாந்தத்தால் விளங்கும். வீட்டு எஜமானனேடு நாயும் ஓர் அறைக்குள் படுத்துக்கொண் டிருந்தது. இராத்திரி அவ்வறை பற்றிக்கொண்டது. அதிகமாய்த் தூங்கும் இயல்பினனான அதன் எஜமானனை உரத்த சப்தத்துடன் குரைத்து எழுப்ப முடியாததினால், அது கதவண்டை யோடி உரக்கக் குரைத்துக்கொண்டும் கதவை மோதிக்கொண்டு மிருந்தது. அண்டையிலுள்ளவர் நித்திரையினின்று எழுந்துகொள்ளும்படியாக அவ்வளவு சப்தம் பண்ணிற்று. அநேக மனிதர்கள் அவ்விடம் ஓடிவந்தார்கள். நெருப்பைப் பார்க்கவே கதவை உடைத்துத் திறந்து தூங்குகின்ற மனிதனையும் நாயையும் தப்புவித்தார்கள்.

பக்ஷி இறகுகளின் வர்த்தகம்.

"கன்ட்ரிசைட் மந்த்லி" (Country side monthly) என்னு மொரு மாதாந்தப் பத்திரிகையில் மிஸ்டர் இ. கே. ராபின்சன் என்கிற துரைமகன் பின்வருமாறு எழுதியிருக்கிறார்:—

"வெகுகாலமாய்ப் பலபேர்களால் பலவிதமாய் வாதிக்கப்பட்டுவருகிற விஷயமாகிய இறகு வியாபாரத்தைப்பற்றி எனக்குள்ள அபிப்பிராயத்தைத் தெரிவிக்கும்படி யென்னை யநேகர் கேட்டுக்கொண்டார்கள். ஒரு திறத்தார் இறகு வியாபாரத்தை நிறுத்த வேண்டிய தவசியமானதென்று முறையிட, சில பத்திராதிபர்களும் மற்றுஞ் சில தேசாபிமானிகளும் அதை நிறுத்துவதனால் பிரிட்டிஷ் வியாபாரிகளுக்கு அதிக லாபத்தைக் கொடுத்துக்கொண்டு வருகிற ஒரு வர்த்தகத்தை அந்நிய தேசங்களுக்கு மாற்றிவிடுவது தவிர வேறு பயனிருப்பதாகத் தெரியவில்லையென்று கூறுகிறார்கள். இந்தத் தேசத்திலிருக்கிற நாகரிக ஸ்திரீகளின் தொப்பிகளுக்கு வேண்டிய இறகுகளைச் சேகரிப்பதன்பொருட்டு அதிக ஜீவஹிம்சை நடக்கிறதென்பதற்குச் சந்தேகமே யில்லை. நம்முடைய மனதுக்கிசைந்துவிட்ட அப்பியாசங்களினால் அநேக காரியங்களின் உண்மையான தன்மை நமக்கு எளிதில் புலப்படுகிறதில்லை. இல்லாவிட்டால் நியாயமாய் நாம் யோசிக்குமிடத்து இவ்வூரில் உடுப்புகள் விற்கிற கடைகளி லிருக்கும் இறகுகளெல்லாம் எவ்வளவு இரத்தத்தில் தோய்ந்திருக்க வேண்டுமென்று நமக்குத் தோன்றுதா? அமெரிக்கா கண்டத்திலிருக்கிற ஒரு ஜாதிச் சிறு குருவியில் ஆயிரக்கணக்கான பறவைகளின் கழுத்திறகை மாத்திர மெடுத்துச் சேர்த்துத் தைத்த சீமாட்டிகளின் பாதரக்ஷையின் விலை ஜதையொன்றுக்கு ஐந்நூறு பவுன் ஆகிற தென்றால் இறகு வியாபாரத்தின் விருத்தியுடன் ஜீவஹிம்சையு மதிகரிக்கிற தென்பதில் ஐயமென்ன? ஆகையால் இத்தேசத்துப் பெண்மணிகள், தாங்க ளணிகிற இறகுகளைச் சேகரிப்பதில் ஏராளமான கொலை நடந்திருப்பதினால் முதலில் இரத்தந் தோய்ந்திருந்த இறகுகளைத் தலையி லணிந்துகொள்வது பெண்மையல்ல வென்பதை யறிந்துகொள்ளுகிற காலம் எப்பொழுது வருமோவென்று யாவரு மெதிர்பார்க்கவேண்டும். இறகு வியாபாரத்தை நிறுத்துவது ஜீவஹிம்சை நிவாரணிகளுக்கு மாத்திரமேயன்றி தாவர சங்கம சாஸ்திரிகளுக்கும் பிரியமுள்ளதே. ஏனென்றால், அபூர்வமான பறவைகளி னிறகைத்தான் பலரும் வாங்க விரும்புவார்கள். உலகத்தில் அதிக அழகுள்ள பறவையினங்கள் அங்கோரினம் இங்கோரினமாகச் சொற்பமாய்ப் படைக்கப்பட் டிருக்கின்றன. ஆகவே, அபூர்வமான பக்ஷிகளி னிறகுகளை எவ்வளவு விலையாயினுங் கொடுத்து வாங்குகிறவர்க ளிருப்பதினால் அவை யகப்படுகிற நாடுகளி லிருப்பவர்கள் அவைகளை வரம்பின்றிச் சேகரித்துவந்தால் அப்பறவைகளின் சந்ததியே யற்றுப்போகும். தன லாபத்தின் பொருட்டு இவ்விதச் சிரேஷ்டமான பறவை யினங்களை நிர்மூலமாக்குவது பெருங் குற்றமென்று புலப்படவில்லையா? விலையுயர்ந்த இறகுகளின் வர்த்தகத்தைமட்டும் நிறுத்தலாமென்று சிலர் எண்ணக்கூடும். உயர்ந்த பறவையானுலென்ன, சாதாரணமான பறவையானுலென்ன, எதைக் கொன்றாலுஞ் ஜீவஹிம்சைதானே. ஆயினு மொருகாரியஞ் செய்யலாம். அதாவது, இறகுகளை விற்பதற்கென்று பறவைகளைக் கொல்லாமல், சகஜமாயிருக்கிற பறவைகளி னிறகுகளையும், நியாயத்துக்கு விரோதமில்லாமல் வீடுகளில்

கொல்லப்படுகிற பறவைகள், மற்றும் புதிய இறகுகள் முளைப்பதற்குமுன் பழைய இறகுகளை யுதிர்க்கிற பக்ஷிகள் இவைகளின் இறகுகளையும் விற்க அனுமதி கொடுக்கலாம். மயில், தீக்குருவி, பெசன்ட் (Pheasant) என்னுமொரு ஜாதிக்கோழி முதலியவை மேற்சொன்ன வகுப்பி லடங்கும்.

இதுவிஷயத்தில் சட்ட மேற்படுத்துவது அதிக நன்மையைப் பயக்காதென்றும், நாளாவர்த்தியில் ஜனங்கள் தாமே ஜீவஹிம்சையை வெறுத்து இறகுகளாற் செய்யப்பட்ட உடுப்புகளை யணியக்கூடாதென்று தீர்மானித்துக் கொள்ளவேண்டுமென்றும் சிலர் அபிப்பிராயப்படுகிறார்கள். அப்படிப்பட்ட தீர்மானங்கொண்ட ஸ்திரீகள் யாராவது தங்களுக்கு இறகுகள் தைத்த தொப்பி வேண்டாமென்று சொன்னால், கடைக்காரர் தம்முடைய கடைக்கு வருகிற இறகுகள் பறவைகளைக் கொன்று சேகரிப்பட்டனவல்ல வென்றும், உயிரோடிருக்கிற பறவைகளினின்று தானுயுதிர்கிற இறகுகளைத்தா னவர்கள் தருவிக்கிறதென்றுங்கூறி, அப்படிப்பட்டவர்களை யதை வாங்கும்படி தூண்டுகிறார்கள். வேறு சில கடைக்காரர் அந்த இறகுகள் பெரும்பாலும் உண்மையாய்ப் பறவைகளி னிறகல்லவென்றும், ஏதேதோ வஸ்துக்களினாற் செய்யப்பட்ட போலி இறகுகளென்றுஞ் சொல்வதுண்டு.

இப்படிப் பலவிதமான தந்திரங்களினால் தலைகாக்கப்பட்டவொரு வர்த்தகத்தை நிறுத்தவேண்டுமானால் பொதுஜனங்கள் ஒருமைப்பட் டுழைக்கவேண்டும். அவ்வித ஒருமைப்பாடு சீக்கிரத்தி லுண்டாகக் கோருகிறேன்.

இங்கிலாந்தில் இறகுகளை யணிகிற வழக்கத்தை நிறுத்துவதினால் அந்த வர்த்தகம் பிறதேசத்தாரா லெடுத்துக்கொள்ளப்படுமோ வென்கிற விஷயமும் கவனிக்கத்தக்கதே. அவ்வாறே அந்த வர்த்தகத்தின் லாபம் வேறு தேசங்களுக்குப் போனபோதிலும், அதனால் நம்முடைய நாட்டில் நல்லொழுக்க மதிகப்படுவதைப் பார்க்குமிடத்தில் அதனாலுண்டாகிற தனநஷ்டத்தை யொருபொருட்டாக வெண்ணக்கூடாது.

மேலும், இக்காலத்தில் நாகரிகம் பரவியிருக்கிற தேசத்தவர்கள் ஒருவரோடொருவர் அதிக சிநேகமாய்ப் பழகிக்கொண்டு வருவதினால் ஒரு தேசத்தாரால் உசிதமென்று கொள்ளப்பட்ட விஷயங்களை மற்றவர்களும் அங்கீகரிப்பார்கள். அநேக காலமாய் உலகமுழுவதும் நடந்துவந்த அடிமை வர்த்தகத்தை (Slave trade) முதலில் இங்கிலாந்தில் சட்டமூலமாய் நிறுத்தப்பட்டதினாலன்றோ மற்றத் தேசத்தாரெல்லாரு மதே மாதிரி அந்த வழக்கத்தை நிறுத்திவிட்டார்கள். அதேவிதமாய் இறகுகளைத் தலையிலணிகிற அநாகரிகமான பழக்கத்தை நாகரிகமுள்ள தேசங்களினின்றும் துரத்திவிட நம்முடைய தேசமே வழிகாட்டக்கடவது. இறகுகளில்லாமல் ஸ்திரீகள் இலட்சணமாயலங்கரித்துக்கொள்ள முடியாதென்று எவருஞ் சொல்லமாட்டார்கள். இறகுகளுக்குச் செலவழிக்கிற பணத்தை வேறு எவ்வளவோ விதமாய்ச் செலவழித்து அதைவிட நன்றா யலங்கரித்துக்கொள்ள முடியும். பலவாறு சொல்லி யென்னபயன்? தலையி லிறகணிவது முற்காலத்து நாகரிகமற்ற பழக்கங்களி லொன்றாகையினா லதை நிறுத்துவது அவசியம். ஆனா லதற்காக இராஜாங்கத்தார் பிரவேசிப்பதைக் காட்டிலும் பிரஜைகள் தாமே சீர்படைவது மிகவு முசிதமானது."

ஜந்துக்களுக்குக் கோடூரம்.

"ஜந்துக்களுக்கு ஹிம்சை செய்யக் கூடாது" என்னும் 1849-ம் வருஷத்திய சட்டப்படி, மிருகங்களின் வாலை வெட்டிவிடுவது குரூரமான செய்கையென்று கடந்த ஆகஸ்டு மாசத்தில் லண்டன் நகரத்து மாஜிஸ்திரேட் ஒருவர் தம்மிடத்தில் கொண்டுவரப்பட்ட ஒரு வழக்கில் தீர்ப்புச் செய்தார். அந்த வழக்கில் ஒரு கைத்தொழில் வர்த்தகன் தன்னுடைய குதிரைகளின் வாலை வெட்டியதில் அவன் அவைகளுக்குஹிம்சை செய்ததாகக் குற்றஞ்சாட்டப்பட்டான். அதற்கவன் தன்னுடைய குதிரைகளின் வாலை வெட்டினது ஹிம்சையான காரியமல்ல வென்றும், அவ்வாறு செய்வது அவைகளுக் கலங்காரமாயிருப்பதோடுகூட அவைகளின் முதுகுக்குப் பலத்தைக் கொடுப்பதாகவும் நியாயங் கூறினான். அதற்காக இரண்டு ஜந்து வைத்திய சாஸ்திரிகளை விசாரித்தபொழுது அவர்கள் குதிரையின் வாலை வெட்டினால் அதன் முதுகுக்குப் பலமுண்டாகுமென்பது மதி

கெட்ட கொள்கையென்றும், அவ்வாறு செய்வது அதற்கு ஹிம்சையேயென்றுஞ் சொன்னார்கள். அதன்பேரில் அந்த மாஜிஸ்திரேட் அந்த வர்த்தகனுக்கு மூன்று பவுன் அபராதம் விதித்தார். அது அவன் செய்த குற்றத்திற்கு மிகவுங் குறைந்த தண்டனைதான். ஆயினும் இந்தத் தீர்ப்பினால் குதிரையின் வாலை வெட்டுகிற வழக்கத்தை நிறுத்துவதற்கு முயல ஒரு ஹேது உண்டாயிருக்கிறது.

குதிரைகளுக்கு ஜீனி மாட்டும்பொழுது அவைகளின் வால் சிறிது குட்டையாயிருந்தால் கொஞ்சம் சுலபமாயிருக்குமென்றும் அவை குட்டிகளா யிருக்கும்பொழுதே வாலின் நுனியில்மட்டும் சிறிது வெட்டினால் நலமென்றும் சிலர் சொல்லுகிறார்கள். அது எப்படியிருந்தபோதிலும் வாடகை வண்டிக்காரர்கள் அவர்களுடைய குதிரைகளுக்கு அழகு செய்வதாக நினைத்து அவைகளின் வாலை மூடத்தனமாய் முழுவதும் வெட்டிவிடுகிற வழக்கத்தையும் சரியானதென்று நினைத்து அப்படியே அநேகர் செய்து வருகிறார்கள்.

அநேக சித்திரப் படங்களிலுங்கூட குதிரை, வேட்டைநாய் முதலிய மிருகங்களின் வாலையும் காதையும் நுனியில் வெட்டுப்பட்டவைபோல் எழுதுகிறார்கள். மிருகங்களின் அங்கங்களை இயற்கையாய் வைத்திருப்பது நாகரிகத்திற்குக் குறைவென்றும், அழகற்றதென்றும் நினைக்கிறார்கள்போலும். அங்கஹீனம் பண்ணுவது எவ்வாறு அழகைத் தருமோ தெரியவில்லை?

ஜீவஹிம்சை செய்பவர்களைத் தண்டிப்பதற்காக வேற்பட்ட சட்டங்களின் கருத்துகளை நியாயாதிபதிகள் இக்காலத்தில் அதிக விரிவாகப் பொருள்கொள்ளத் தலைப்படுகிறார்க ளாகையினால் சில ஜனங்களின் அபிப்பிராயப்படி நாகரிகத்திற்காகவென்று மிருகங்களை அங்கஹீனப்படுத்துகிற வழக்கம்சில காலத்திற்குள் பெரும்பாலுங் குறைந்துவிடும்.

கொஞ்சநாளுக்குமுன் ஒரு பறவை வியாபாரி தான் விற்பனைக்காக வைத்திருந்த சேவல்களின் சூடுகளை வெட்டிவைத்திருந்ததற்காகத் தண்டனைக் குட்படுத்தப்பட்டான். அவனும் முன்சொன்ன மாதிரியே சேவல்க ளழகாய்த் தோன்றும்பொருட்டு அவைகளின் சூடுகளை வெட்டினதாகச் சொன்னான். ஆயினுஞ் சேவற்சூடுகளை வெட்டுவது அவைகளுக்கு அதிக துன்பத்தைக் கொடுத்திருக்குமென்று அவனைத் தண்டித்தார்கள். அந்தப் பிராதை விசாரித்த நியாயாதிபதிகளி லொருவர், மனிதனுடைய உபயோகத்திற் கனுகூலமா யிருக்கும்பொருட்டுச் செய்கிறவைதவிர மற்றப்படி அனாவசியமாய்ப் பிராணிகளுக்கு நோயுண்டாகும்படி செய்கிற காரியங்களெல்லாம் ஹிம்சை யென்று சொல்லப்படலாமென்றும், அப்படிப்பட்ட காரியங்கள் மேற்கூறப்பட்ட சட்டப்படி தண்டிக்கத்தக்கவை யென்றுஞ் சொன்னார்.

அதற் குதாரணமாக, ஒரு ஐந்து வைத்திய சாஸ்திரி பன்றிகளைக் கொழுக்கவைக்கும்பொருட்டு அவைகளின் விரையை வாங்குவது ஹிம்சையாகாதென்று சொன்னதை மேற்கோளாக வெடுத்துரைத்தார். அவர்களில் மற்றொருவர், ஒருவன் தனக்கோ அல்லது தன்னுடைய மிருகத்திற்கோ அனுகூலமானதென்று உண்மையாகவே நம்பி அதற்கு ஏதாவது ஹிம்சை செய்தால் அவனைத் தண்டிக்கக் கூடாதென்றும், ஒருவேளை யவன் கொண்ட அபிப்பிராயம் தப்பாயிருக்கும் பக்ஷத்தில் அப்படிப்பட்ட விஷயங்களில் உண்டாகிற நூதனமான அபிப்பிராயங்களையும் கொள்கைகளையு மவனுக்கெடுத்துரைத்து அவனுடைய அறிவை விருத்திசெய்ய வேண்டுமேயொழிய தண்டனையினால் கற்பிக்கக் கூடாதென்றுங் கூறினார். மேலே சொன்னவர்களி னபிப்பிராயத்தினின்றும் வேறுபாடான அபிப்பிராயங்கொண்ட மற்றொரு நியாயாதிபதியின் முன் ஒருவன் தன்னுடைய எருதுகளின் கொம்புகளை அறுத்ததற்காகக் குற்றஞ் சாட்டப்பட்டான். கொம்புக ளில்லாவிட்டால் எருதுகள் சுலபமாய் மேயக்கூடுமென்றும், அந்தக்கொம்புகளை விற்பதினால் தனக்கும் லாபம் வருவதினால் அவன் செய்தது ஹிம்சை யல்லவென்றும் சொல்லித் தப்பித்துக்கொள்ளப் பார்த்தான். ஆனாலந்த நியாயாதிபதி எருதுகள் மேயும் பொழுது அவைகளின் கொம்புக ளவைகளுக்கு இடைஞ்சலாயிராதென்றும், தான் அடைய நினைக்கிற லாபத்தி னளவிற்கும் அதற்காகச் செய்கிற காரியத்தி னளவிற்கும் பொருத்தமிருக்க வேண்டுமாகையால் ஏதோ

சிறிது பணத்திற்காக நாட்டிலுள்ள குதிரைகளேயும் எருதுகளேயும் கஷ்டப்படுத்துவதுடன் அவைகளின் இயற்கைத் தோற்றத்தையு மாறச்செய்வது குற்றமென்றுஞ் சொல்லி அக்குற்றவாளியைத் தண்டித்தார்.

அவ்வாறே பல தேசங்களிலுமுள்ள நியாயாதிபதிகள் ஜீவஹிம்சை நிவாரணத்தின் பொருட்டு அவ்வத்தேசங்களி லேற்பட்டுள்ள சட்டங்களே மிகுதியாகப் பிரயோஜனத்திற்குக் கொண்டு வருவார்களென்று கோருகிறோம்.

வர்த்தமானக் குறிப்புகள்.

1. லான்ஸ்டேல் பிரபுவின் உதாரத்துவம். — லண்டன் மகா நகரத்தில் பிராங்க் தாம்சன் (Frank Thompson) என்கிற ஓர் அடுப்பு வியாபாரி, கடந்த ஏப்பிரல் மாதத்தில் மிகவும் பலவீனமாயிருந்த வொரு கழுதையினிடத்து வேலேவாங்கின குற்றஞ் சாட்டப்பட்டான். கோர்ட்டார் அந்தக் கழுதை அதிக கேவல ஸ்திதியி லிருந்ததைக் கண்டு அதைச் சுட்டுவிடுவதே சரியான காரியமென்று தீர்ப்புச் செய்தார்கள். அங்கு வந்திருந்த லார்டு லான்ஸ்டேல் (Lord Lansdale) என்னும் பிரபு அந்த அடுப்பு வியாபாரி அக்கழுதையை அநேக நாளாய் அன்புடன் வளர்த்துவந்ததாகக் கேள்வியுற்று அவனுக்கொருபுதிய கழுதையை வாங்கித் தருவதாக வாக்களித்து குதிரைகளின் காட்சி நடத்துகிற மைதானத்திற்கு அவனே மறுநாள் வரும்படி சொன்னார். அவன் அவ்வாறே அந்தவிடத்திற்குத் தன் மனேவியுடன் சென்றான். பிரபு அவர்கள், ஒரு புதிய வண்டி புதிய கழுதை புதிய ஜீனி சாமான் எல்லாவற்றையும் வாங்கி அந்த வண்டியி லவ்விருவரையும் ஏற்றி இன்னெரு வண்டிநிறையப் புல்லேயும் இனமாகக் கொடுத்தார். அந்த தம்பதிகள் லான்ஸ்டேல் பிரபு அவர்களே வாழ்த்திக்கொண்டே வண்டியை யோட்டிச் சென்றார்கள்.

---

2. நாய்கள் புலியைக் கொன்றது.—பூனுவில் ஏதேனுமொரு கதையை விநோதமாகச் சொல்லி அதை யாவரும் நிஜமென்று நம்பும்படி செய்யக்கூடும். பூனுவுக்கு சுமார் 10 மைல் தூரத்திலுள்ள ஒரு கிராமத்தில் சென்ற ஜூலேமாசம் 16-ம் தேதியன்று விடியற்காலத்தில் சில நாய்கள் சேர்ந்து ஒரு புலியைக் கொன்றுவிட்டதாகப் பிரஸ்தாபஞ் செய்தார்கள். தசையில்லாத வெறு மெலும்பைக் கடித்துத் தின்னுகிற நாய்கள் அவைகளின் இரத்தத்தை உறிஞ்சிக் குடிக்கும் புலியைக் கொன்றனவென்பது நம்பக்கூடியதாயில்லே. ஆயினும் அது வாஸ்தவமாய் நடந்ததாகச் சொல்லுகிறார்கள். அக்கிராமத்தார் அந்தப் புலியை கணேஷ்கண்டு என்னுமூரிலிருந்த கலெக்டர் துரையவர்களுக்குக் காண்பிக்கும்பொருட்டுச் சுமந்து சென்றார்களாம். அவரென்னவென்று கேட்க, அந்தப் புலி அவர்களுடைய கிராமத்திற்குள் வந்ததாகவும், அதை அந்தக் கிராமத்திலுள்ள நாய்கள் கூடி அதைக் கொன்றுவிட்டதாகவுஞ் சொன்னார்களாம். புலியின் தேகத்திற் காணப்பட்ட காயங்களேப் பார்த்து அவர் ஆச்சரியப்பட்டு அக்கிராமத்தாருக்கு வெகுமதியளித்தாராம்.

---

3. காட்டுப் பக்ஷிகள்.—பலவிதமான காட்டுப்பக்ஷிகளே அவற்றின் இறகுகளுக்காகக் கொல்லவாவது பிடிக்கவாவது கூடாதென்று ஜப்பான் தேசத்து இராஜாங்கத்தார் ஒரு சட்ட மேற்படுத்தியிருப்பதாகத் தெரிகிறது. அச்சட்டத்திற் கூறப்பட்டுள்ள விஷயங்கள் ஜீவ ஹிம்சையைத் தவிர்க்க வேண்டுமென்று சொல்லுகிறவர்களுக்கு மிகுந்த களிப்பையுண்டாக்கும். ஐரோப்பாக் கண்டத்திலுள்ள பிரான்ஸு, ஜர்மனி முதலான தேசங்களில், பயிர்களே நாசஞ்செய்கிற புழுக்களேத் தொலேப்பதற்காகக் காட்டுப்பக்ஷிகளேக் காப்பாற்றும் சபையொன்று ஏற்பட் டிருக்கிறது. அதனல் அந்தக் கண்டத்தில் இறகு வியாபாரஞ்செய்யும் வர்த்தகர்களுக்கு இறகுகள் கிடைக்கிறதில்லே. ஆகையால் அவர்கள் இறகுகளுக்காக கொரியா, ஜப்பான் முதலிய தேசங்களுக்குப் போகத் தலேப்பட்டார்கள். இப்பொழுது அத்தேசத்தில் மேற் கூறப்பட்ட சட்டம் ஊர்ஜிதமாகிவிட்டால் அவ்விடத்திலும் காட்டுப் பறவைகளின் இறகுக ளகப்படுவது துர்லபமாகும்.

Printed at the S. P. C. K. Press, Vepery, Madras—1911.